என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம்

— நடித்த —



# பைத்தியக்காரன்

எனெஸ்கே பிலிம்ஸ் தயாரிப்பு.

# கதைச் சுருக்கம்

கல்யாணம் ஆன சிலநாட்களுக்குள் விதவையாகிவிட்ட நளினாவுக்கு மறுபடியும் கல்யாணம்செய்து வைக்கவேண்டும் என்று அவள் தமையன் சேகர் வாதாடுவதைத் தந்தை ஆறுமுகமுதலியார் பிடிவாதமாக ஆக்ஷேபிக்கிறார், ஆனால் அவர் மட்டும் மனைவியை இழந்தவுடன ஓர் இளம் பெண்ணை இரண்டாந்தாரமாகக் கொள்கிறார். மணப்பெண் காந்தா முற்போக்கான கொள்கையுடையவள், படித்தவள். தற்போது அவள் காதலன் மூர்த்தி அபாண்டமாகத் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் இருக்கிறான்.

காந்தா ஆறுமுக முதலியாருக்கு மனைவியாக வாழ மறுக்கிறாள். அவரைத் "தாலி கட்டிய தகப்பனார்" என்றே மதிக்கிறாள். நளினாவின் ஏங்கமாகவே இருந்துவரும் சேகருக்கு வேளையில் சாப்பிடுவது தூங்குவது கூட முடிவதில்லை. ஆறுமுக முதலியாரின் நிம்மதி அடியோடு குலைகிறது மூர்த்தி விடுதலையடைகிறான். காந்தா ஆறுமுக முதலியாரிடம் தான் வீட்டிலிருந்து வெளியேற அனுமதி கோருகிறாள். அவரும் வேறு வழியில்லாமல் அவள் விருப்பத்திற்குத் தலைவணங்குகிறார். இதுவரை பட்டுத்தெளிந்ததின் பலனாக நளினாவுக்குக் கல்யாணம் செய்வது என்று நிச்சயிக்கிறார்.

ஆனால் நளினாவின் பால்ய நண்பன் சோமு அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாக ஆசைக்காட்டி அவளைக் கெடுத்து விடுகிறான். பிறகு அவளை மணக்க மறுக்கிறான். நளினா தற்கொலை செய்து கொள்ளுகிறாள்.

சேகர் ஆத்திரத்துடன் சோமுவைக் கழுத்தைப் பிடித்து விசாரித்துக்கொண்டிருக்கையில் அவன் தலை சுவற்றிலிருந்த ஓர் ஆணியில்மோதுண்டு உயிர்துறக்கிறான். சேகர் "பைத்தியக்காரனைப்?" போல், "பெண்களே நீங்களெல்லாம் கல்யாணம்செய்து கொள்ளாதீர்கள். கல்யாணம்செய்து கொண்டால் விதவையாகிவிடுவீர்கள்" என்று கதறுகிறான்.

மிகுதியைத் திரையில் காண்க.

N. S. கிருஷ்ணன், T. A. மதுரம்,

S. V. சஹஸ்ரநாமம், நடித்த

# பைத்தியக்காரன்



பதிப்பாளர் :

ஒ. ஆதிமூலம் சன்

20, பெருமாள்கோவில் தோட்டத்தெரு,

சென்னை. நெ. 1.

இதன் விலை]      1948      [அணா 1

# வைத்தியக்காரன்?

பாட்டு

நளினா

ஜெகஜ் ஜோதி தரும் நாளே—ஆதவன்போல்
சோபிதம் கார்த்திகை தீபம் (ஜெக)
அன்பு மிகும் அண்ணாவுடனே
கண்மலர் மணம்போல் நான் பிறந்தேன்
நலமாகு மாநிலம் மேவிய கலைவாழ்விதே (சோபி)
வீணை தரும் இன்ப நாதம் உணரா
வீணரின் நிலையாகுமே புவிமேல்
மான் நிகர் விழி மாதர் மாண்பினை நாளும்
தான நியார்க்கில்லை வாழ்வே
மேன்மையெல்லாம் தரும் மாதரைப் போலே (சோபி)

நடன பாட்டு

ஆடுகின்றாரடி தோழி—ஐயன்
ஆனந்தமாகவே அம்பலத்தில் என்றும் (ஆடு)
தேடுவார் தாணியோர் சேவிக்க
தேவாதி தேவன் சிவகாமி நேசன் நடனம்
தாதிமிதி தத்திமி தகிடதக ததிமி தகதரிகிடதக
ததிமி தகிடதக-ஜம் தரிகிடதக-ஜணுததிமித
தித்தளாங்கு தணும்தணும் தளாங்குமென (ஆடு)
ஆதி அந்தம இல்லா திருவடி தூக்கினர்
அனந்தனும் அருகனும் முனிவரும் இசைந்திட
ஜோதியே உருவான நம்பண் சுந்திரன்
தூய அடி துதித்திடும் சம்பந்தன் மகிழ்ந்திட
தஜ்ஜணு ததிமி தகிட ததிமி தஜ்ஜணு தாம்தரிதத்தீம்
தகிட தத்தஜணு-ஜம்டுஜம்த்த ஜணுத்ததிமித்த
தாதீங்கிணதோம் தீம்தீம் தகிட தாம்தாம் முழங்க (ஆடு)

சனி & வள்ளி

சனி: வருது வரப்பாக்குது வந்தூட்டுது—கோவம்
வள்ளி: சும்மாவரட்டும் வந்து போகட்டும் அது கெடக்குது
சனி: பிரியம் எம்மேலே ஒனக்கு இல்லையா
வள்ளி: வாய்ப் பேச்சாலே தெரிய மூளை இல்லையா
சனி: நிதானி கோவம் (வருது)
நா வந்து வந்து போற சங்கதி

தெரிஞ்சுக்காமெ இருக்குதே
மனுஷங்கூட பேசப் பேச
ஏ மனசெக் கெடுக்குதே
தயிரைப் போட்டுக் கடையறே
அது என்னு கேக்கறேன் [ம்

வள்ளி: நீ வாரதும் போறதும் வாலாட்றதும் வம்பளக்றது
ஒனக்கு வளக்கமானது எனக்கும் பளக்கமானது
அதிலே என்ன தெரியுது

சனி: அட கடவுளே கடவுளே
இந்தக் காலத்திலே
இம்புட்டூண்டுக் குட்டிக்கெல்லாம் எல்லாந்தெரியுது
இது எத்தப் பெரியப் பொண்ணு
இன்னும் ஒண்ணும் தெரியலெ
இது எப்படிப் பொளேக்குமோ

வள்ளி: மூடு மந்திரப் பேச்சு வேண்டாம் நிறுத்து
ஒங்கருத்து வெளிப்படுத்து

சனி: கல்யாண காரியம் கவனிக்க வேண்டாமா

வள்ளி: பெண்ணேயும் பாத்தாச்சா

சனி: ஆச்சு

வள்ளி: புடித்தமுமாச்சா

சனி: பேஷா

வள்ளி: அது யாரு எந்த ஊரு என்ன பேரு

சனி: இதோ பாரு

வள்ளி: நானு

சனி: ஆமா நீ தான் நான்தான்

வள்ளி: நல்லாருக்குதாம் ஞாயம் சேலையிலே இருக்குதாம்சாயம்
நானும் நீயாம் மூஞ்சியெம்பாரு

சனி: தாங்காது (வருது)

காந்தா & மூர்த்தி

காந்தா: ஜீவ ஒளியாக ஜெகமீதே வாழ்வோம்
சுபதினமே இனி நலமேவிட வினை போக்கிடுமே

மூர்த்தி: குயில் போலும் இசை பாடும் குலமாமணியே
குலம் வாழ நிலை காணும் எனதாருயிரே

காந்தா: மத ஜாதி விதியில்லாத மணமாகுமே [வாமே
என்நாளும் பொதுவான முறையாம் ஈதே இன்பவாழ்

மூர்த்தி: காணும் கண்மேவும் ஒளிபோலும் கலந்தோம் நாமே
கலைசேர் மயிலே
காந்தா: கரு மாமுகிலே
புதிதான மனை வாழ்வில் புகுவோமே நாமே (சுப)
காந்தா } மனிதர் வாழ நன்மார்க்கமிதே புனிதமிகும் காதல்தா
மூர்த்தி } தனித்தொரு போதும் வாழா உண்மை [னே
கருத்துள்ளதாம் காதல் உண்மை

நளினி

தாயிழந்த பாவி நான் தனியாகினேன்
பிறந்தும் சுகமேதும் காணேன் பேதையே
பேணும் கணவன் மாண்டதாலே வாதையே
தாலி போனால் தாழ்வு பேசலாகுமா
தாகம் போலும் தேக வாதை போகுமா
தரணிதனிலே என் விதி ஈதாகுமா
பதியிழந்தே வாடுகின்றேன் புவியிலே
பசி இருந்தும் சோறு காணா பாவிபோல்

சனி

ஜெயிலுக்குப் போய்வந்த சிரேஷ்டர் மக்களே
சீர்திருத்து வாங்கோ—இந்த
ஜெகத்தையாளுவாங்கோ—சிலர்
திண்டாடித் திரிவாங்கோ—இன்னு
தெளிவாய்ச் சொன்னாங்க
அதைத் தெரியவச்சதோர் இரண்டு வருஷத்தில்
அறிவுக்குப் புரிஞ்சுதுங்க
ஆனா கொஞ்சம் சிரமம் இருந்துதுங்க
பயங்கெட்ட பேர்வளிங்க—அடி தடி
பண்ணிகிட்டுப் போனவங்க—திருடியும்
பெண்ணைத் தொட்டும் போனவங்க - சோம்பேறிங்க
புத்திகெட்டு சக்திகெட்டு போசனமுந் தட்டுக்கெட்டு
போலீஸுக்காராலே புடிபட்டு அடிபட்டு
போனவங்க உண்டுங்க அது தப்புங்க
நா அப்படி இல்லிங்க பின்னே எப்படின்னு கேப்பீங்க
சொல்றேன் கேளுங்க
ஒரு சிலர் கொண்ட கொடிய பொறாமை உருவமாச்சுதுங்க
அதாலே உண்மையை மறந்தாங்க
பொய்யையே உறுதிப்படுத்தினாங்க

உருட்டும் பெறட்டுமே வரவர உலகத்தில்
மிகுந்து போச்சுதுங்க - காரணம்
ஒற்றுமை இல்லிங்க - நமக்குள்
அங்கே காக்கிச் சட்டை வார்டர்களைக் கண்டேனுங்க
சுத்தக் கதர்ச் சட்டை காரரையும் கண்டேனுங்க
களவாணிப் பசங்களையும் கண்டேனுங்க
வெள்ளைக் கறுப்புக் குல்லாக்களையும் கண்டேனுங்க
அங்கே கஞ்சி உண்டுங்க - சிலர்க்கு
காபி உண்டுங்க
களியும் உண்டுங்க - சோறு
கறியும் உண்டுங்க இன்னம் கேளுங்க
அங்கே படிச்சவங்க படியாதவங்க படிக்கப்
பல கலாசாலையதும் உண்டுங்க சாப்பிடச்சொல்லி
பிள்ளைகளைப் பெத்தெடுத்தவங்க போலே
பிரியமும் காட்டுறுங்க நம்புங்க
விசில் அடிக்கடி ஊதுவாங்க
அதன்படி ஆஜராகி நிக்கோனுங்க
அங்கே உடைப்பஞ்சம் ஏதுங்க
உணவுரேஷன் ஏதுங்க
ஒடம்புக்கு ஏதாவதுன்னுங்க
டாக்டர் ஓடியாந்துடுவாருங்க
கூலிக்குப் போகும் வேலைத் திண்டாட்டக்
குறையே இல்லிங்க — கும்பிடக்
கோயிலுமில்லிங்கே — அதுவொரு
கொறையா சொல்லுங்க
இட்ட சோலியப் பாக்கனும் மாலையானவுடன்
தூங்கவுஞ் சொல்றுங்க
மனத்தையும் சுத்தப்படுத்துறுங்க (ஜெயி)

நளினி

சன்மார்க்கமே இல்லா சமூகப் பேயின் சதியாலே
என்போலும்பேதை எத்தனை பேருள்ளாரோ புவிமேலே(சன்)
என் வாழ்க்கைத் துணையாம் நாதன் இறந்தார்-அது என் குற்ற
கண்ணே இல்லாத மூடக் கயவர்செய்த சதியாலே [மா
பெண்ணுக என் பிறந்தேன் பேய்ச்சமுகம் நடுவே நான்
மாங்கல்யம் குங்குமம் மலர்யாவும் இழந்தேன்
மாறியதோ மண உணர்ச்சியும் உயிரும்தானே

காந்தா

மனமுவந்த மாரன் சொந்தம் சேருமா
வலுவில் என மணந்த கிழவன் மனம் மாறுமா
அழகை விழிகள் காணவே நேருமா
அலது விழிகுருடன் புகழ்ந்திடவே நேருமா
நேசமெல்லாம் கானல் நீர்போல
நிலமேல் மாறுமா கைகூடுமா
காலம்போன காமுகன் கல்யாணம் உண்மையாகுமா
கவலையது தீருமா
காலம் வீண் போமா
அனுகூலம் உண்டாமா (மான)

காந்தா

வினவெல்லாம் வீணானதே
என் நிலையும் மோசமானதே
அனலின் மீதிலே மெழுகாகினேன் அந்தோ
பெண் பேதை யான் (வின)
நலமிழந்த நளினிக்கு நல்வாழ்க்கை இல்லை
நன்குணர்ந்தசேகருக்கு அதனால் தொல்லை
அழகுடைய மூர்த்தி துயர் களவே இல்லை
ஆறுமுக முதலி மனம் மாறவில்லை
நாளை ராத் தீபாவளி
தலை நாளிதென் தீபாவளி
மாலை சூடிய மணமாது
நானெப்போது ஆகினேன் (வின)

வள்ளி & சனி

வள்ளி: ஆசையாக பேசிப்பேசி ஆளை வைக்காதே மாமா
காசெப் பெரிசா நெனைச்சி மனசெ கஷ்டப்படுத்தாதே ஆமா
பணத்தை எண்ணிக் கணக்குப் பாக்கும்
மனுஷன் நானேடி பெண்ணே
சனி: குணத்துக்காக எதையும் செய்யும்
குமணன் அல்லோடி கண்ணே
வள்ளி: போடாத நகை என்ன போட்டே-யாரும் (போடா)
இந்தப் பொய் வார்த்தை சொன்னு
பொறுக்கவே மாட்டேன்
பாடகம் தண்டையொடு கொலுசு-பீலிப்
பழசையே மாத்தி என்ன பண்ணினே புதிசு

கதிலேதாவதும்உண்டா
வைரமுண்டா
கண்டதுண்டா
மோட்டார் கார்தனிலே போகிறதை
கனவில் யார் கண்டா
நாடகம் சினிமாவும் உண்டா போனதுண்டா
ஒருநாளாவதுங்களுடன் நான்வந்ததுண்டா (போடா)

சனி: விவரம் புரிஞ்சு கொள்ளனும்-மனுஷன் சொன்ன
வேலையத்த பணக்காரப் பிள்ளைங்க போல
காரியம் இல்லாமே நேரம் போக்காதென்று (விவரம்)

சிலுக்குப்புடவை கேக்குதா - இல்லா
ஒடம்பு குலிக்கி நடக்கேங்குதா - காதிரண்டும்
சீமைக் கமலம் கேக்குதா - போடாப்போறு
செவிடாப் போறனுங்குதா - தாலியுள்ள
கழுத்தட்டிகை இல்லாட்டி
சுருக்கிக்கிறே னுங்குதா
காப்பில்லாக் கை சோத்தை ஆக்கமாட்டேங்குதா
காசு கொடுத்து வாங்கி ஆசையொடு மூக்கில்
பேசரி போடாட்டி வாசம் புடிக்காதா (விவரம்)

நவநாகரீகத்திலே நல்லதைக் கொள்ளோனும்
நாலு சாத்திரம் புராணம் படிக்கோணும்
தவறாமல் தாய்மொழி தமிழை வளக்கோணும்
தருமத்தை ஒருநாளும் மறவாதிருக்கோணும் (விவரம்)

சனி

பணக்காரர் தேடுகிற இன்பம்—ஏழைப்
பாட்டாளி மக்கள் படுந் துன்பம்—காசு (பண)
குணத்தோடு பழகாத கூட்டம்—கூலி
குறைத்துக் கொடுக்கப் போராட்டம் செய்தும்
குளம் வெட்டுவார் மடம் கட்டுவார்
கடன் கொடுத்தே பின் வழக்காடி
அடுத்தோரைக் கொடுத்தாகும் (பண)
காசு பணங் கொண்டவர்க்குக்
கவலையில்லாத நேரம் ஏது-வெள்ளிக் (காசு)
அவர் கண்மூடித் தூங்கமுடியாது
பகல் காலத்திலே கொள்ளை லாபத்திலே
காருண்யம் தானின்றித் தேடும் - தங்கக் (காசு)

கூழையுண்ணும் ஏழை மணிக்கேழு மைல் நடப்பான்
கொண்ட செல்வன் வண்டியேற ரெண்டுபேரை அழைப்பான்
வேலை செய்யும் கூலி ஒரு நாழி அன்னம் புசிப்பான்
ஆலை வைக்கும் கோழை முதலாளி சோற்றை வெறுப்பான்
காட்டைக் காக்கும் ஏழை வீட்டுக்காரி உடம்பு
கட்டுமஸ்தும் கல்லுப் போலிருக்கும் இரும்பு
வீட்டைக்காக்கும் செல்வனின் பெண்டாட்டி உடம்பு
அது வெளியே செல்லும் விஷயமல்ல மெலிந்த துரும்பு
காட்டைக் கொடுக்கும் நவநாகரீகம் நாடுவார்
பூட்டிவைத்த ரொக்கத்தைக் காட்டி உறவாடுவார்
பூட்டும் நகையாடைப் பொருளாலே புகழ் தேடும் (காசு)

## நடன பாட்டு

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா-அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினனடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா-அந்த
கிறுக்கில் உளறும் மொழி பொறுப்பாயடா (பாட்டு)
குயிலும் கிளியும் பாட்டில் கூவுமேயடா-மயில்
குதித்து குதித்து நடமாடுமேயடா
வெயிலும் மழையும் அதில் தோன்றுமேயடா-மலர்
விரிந்து விரிந்து மணம் வீசுமேயடா (பாட்டு)
உள்ளம் தெளியும் ஒரு பாட்டிலேயடா-மிக்க
ஊக்கம் பிறக்கும் ஒரு பாட்டிலேயடா
கள்ளின் வெறிகொள்ளுமோ பாட்டிலேயடா
கண்ணீர் சொறிந்திடுமோர் பாட்டிலேயடா (பாட்டு)
பெண்டு பிள்ளைகளின் பெருமை பெரிதறிந்தேனடா
சண்டைகள் செய்ததெல்லாம் எண்ணித் தலைகவிழ்ந்தேனடா
சுந்திரம் பாட்டில் உள்ளம் துடி துடிக்குதடா
பதமெழும்புதடா கையும் படபடக்குதடா
வந்தேமாதரத்தை பாடவே வாய் திறந்தவுடன்
சந்தேகமில்லை ஒரு புது சக்தி தோன்றுதடா (பாட்டு)

முற்றிற்று.

---

ஸ்ரீமகள் விலாசம் பிரஸ், சென்னை. 1.

ஆங்கிலம் கற்றுக்கொள்ள
ஆவலுள்ளவர்களுக்கோர்

**வரப்பிரசாதம்!**

தமிழ்ப் பாஷையின் மூலம்
இங்கிலீஷ் பாஷையைக் கற்பிக்கும்

---

ராமுலு

# இங்கிலீஷ் ஆசான்

ஓர் சிறந்த புத்தகம்

---

உபாத்தியாயர் உதவியின்றித் தானே ஆங்கில பாஷையை ஆறு வாரத்தில் நன்கு எழுத, வாசிக்க, பேசக் கற்றுக்கொள்ளத்தக்க முறையில், அகராவாரியாகத் தொகுக்கப்பெற்றது.

விலை ரூபா 1—4—0 (தபால் செலவு இனும்)

**எம். எஸ். ராமுலு கம்பெனி**
286, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட்,
சென்னை—1.

# பைத்தியக்காரன்

## நடிகர்கள்

| | |
|---|---|
| சேகர் | எஸ். வி. சகஸ்ரநாமம் |
| ஆறுமுக முதலியார் | டி. பாலசுப்ரமணியம் |
| மூர்த்தி | எம். ஜி. ராமச்சந்திரன் |
| சோமு | கே. சந்திரசேகரன் |
| குருசாமி பிள்ளை | ஜி. எஸ். பாண்டியன் |
| சனி | என். எஸ். கிருஷ்ணன் |
| காந்தா அன் வள்ளி | டி. ஏ. மதுரம் |
| கனிஞ | எஸ். ஜே. காந்தா |
| நடனம் | டி. ஏ. ஜெயலக்ஷ்மி<br>சரோஜா அன் பார்வதி |
| காந்தா தாயார் | எஸ். ஆர். ஜானகி |
| சேகர் தாயார் | சரஸ்வதி |

மற்றும் என். எஸ். கே. நாடக சபா கோஷ்டி நடிப்பது.

திரைக் கதை, வசனம் : எஸ். வி. சகஸ்ரநாமம்

டைரக்ஷன் : கிருஷ்ணன் பஞ்சு

ஸ்டுடியோ : நியூடோன்

பாடல்கள் :

கே. பி. காமாக்ஷி சுந்தரன், உடுமலை நாராயண கவி

டி. ஏ. சம்பந்தமூர்த்தி ஆச்சாரி

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா" என்ற பாடலும் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒலிப்பதிவு : எம். லோகநாதன்.

படப்பிடிப்பு : பி. எஸ். செல்வராஜ்.

வி. மீனாட்சிசுந்தரம்.